வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| தரம் :- 13 (2018) | ஐரோப்பிய வரலாறு I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ *1 – 10* **வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ் ஐந்தினுள் ஒன்று மற்றவையோடு பொருந்தாது பொருந்தாத அப்பெயரை தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புப்புள்ளிக் கோட்டில் இடுக.**

01. 1) கோஸஸ் 2) போல்க்கன் 3) அம்பிறியன்
4) பிரணீஸ் 5) பிரெண்டிஸ் ( )

02. 1) போல்கன் குடாநாடு 2) கிறிமிய குடாநாடு 3) அரபுக் குடாநாடு
4) கோலா குடாநாடு 5) ஐபிரியக் குடா நாடு ( )

03. 1) குடியாட்சி 2) குழுவாட்சி 3) கொடுங்கோலாட்சி
4) இறை முறை ஆட்சி 5) மக்களாட்சி ( )

04. 1) யுதர் 2) ஒஸ்றோ கொதியர் 3) விஸிக்கொதியர்
4) லொம்பாடர் 5) வன்டோவர் ( )

05. 1) நிக்கோவஸ் கொப்பர்னிகஸ் 2) விஸ்லியம் சேகஸ்பியர் 3) கலிலியோ கலிலி
4) ஜொகானஸ் கெப்லர் 5) ஐசக் நியூட்டன் ( )

06. 1) பாராளுமன்றம் 2) கோர்ட்டேஸ் 3) ஸ்ரேட்ஸ்ஜெனரல்
4) ஸ்ராக்சேம்பா 5) டுமா ( )

07. 1) பொஞ்ஞா 2) பாதுவா 3) பாரீஸ்
4) கேம்ப்ரிஜ் 5) லைசியம் ( )

08. 1) பியூப்லொஸ் 2) அஸ்ரெக்கர் 3) மாயா
4) இன்காலர் 5) ஹீணர் ( )

09. 1) பொஸ்பரஸ் 2) டார்டநெல்ஸ் 3) ஜிப்றோல்ற்டா
4) மலாக்கா 5) பனாமா ( )

10. 1) மகாபீற்றர் 2) 16ம் லூயி 3) 15 லூயி
4) 14ம் லூயி 5) 13ம் லூயி ( )

11. 1) ஹோமர் - ஒடிசி
2) சொபகிளிஸ் - ஈடிபஸ்ரெக்ஸ்
3) சோக்கிரடீஸ் - இலியட்
4) பிளோட்டோ - குடியரசு
5) நியூசிடிபீஸ் - வரலாறு ( )

12. 1) ஜோக் - வெனிஸ்
2) ஸ்போரேஸா - மிலான்
3) மெடிஸி - புளோரன்ஸ்
4) எஸ்தே - பெராரா
5) கொன்ஸாகா - மந்துவா ( )

13. 1) நூற்றாண்டுப் போர் - பிரான்ஸ்சும் பங்கு கொண்டது
2) முப்பதாண்டுப் போர் - பிரான்ஸ்சும் பங்கு கொண்டது
3) ஏழாண்டுப் போர் - பிரான்ஸ்சும் பங்கு கொண்டது
4) கிறிமியாப் போர் - பிரான்ஸ்சும் பங்கு கொண்டது
5) ஏழுவாரப் போர் - பிரான்ஸ்சும் பங்கு கொண்டது

14. 1) ஹப்ஸ்வேர்க் - ஒஸ்திரியா
2) பேர்பன் - பிரான்ஸ்
3) றொமாறோவ் - ரஷ்யா
4) ஹொஹென்ஸோலேர்ண் - இங்கிலாந்து
5) ஒரேஞ் - நெதர்லாந்து ( )

15. 1) சீர்திருத்தப்புரட்சி - எல்லாப் பொருளுக்கும் மனிதனே அளவு கோல்
2) புகழ்மிகு புரட்சி - உரிமைகள் மசோதா
3) அமெரிக்கப் புரட்சி - பிரதிநிதித்துவம் இன்றி வரிகள் இல்லை
4) பிரெஞ்சுப் புரட்சி - சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்
5) போல்ஷெவிக் புரட்சி - சமாதானம், நிலமும் உணவும் ( )

❖ **16 – 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுக்கள் / திகதிகள் ஆகியவற்றின் தொகுதிகள் X,Y எனும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுக்கள் / கூற்றுக்கள் / திகதிகள் X நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை ஆனால் சரியான தொடர் ஒழுங்கில் தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுக்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும் போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16.

| X | Y |
|---|---|
| 1) பால்டிக்கடல் | A) றோன் நதி |
| 2) கஸ்பியன் கடல் | B) நைல் நதி |
| 3) ஆங்கிலக் கால்வாய் | C) போ நதி |
| 4) அட்றியாட்ரிக்கடல் | D) விஸ்ரியூலா நதி |
| 5) மத்திய தரைக்கடல் | E) வொல்கா நதி |

1) ECDAB 2) EDABC 3) AEDCB 4) ADCBE 5) EABDC ( )

17. **X** **Y**

| X | Y |
|---|---|
| 1) கொலம்பஸ் | A) மொன்றியல் |
| 2) வெஸ்புஜி | B) நியூபவுண்லாந்து |
| 3) கபேட் | C) தென் ஆபிரிக்கா |
| 4) ஸ்ரான்லி | D) அமெரிக்கா |
| 5) காடியர் | E) மேற்கிந்திய தீவுகள் |

1) EABCD 2) EDBCA 3) ECABD 4) EDBCA 5) EADBC ( )

18.

| X | Y |
|---|---|
| 1) ஸ்பானியா | A) லூயி xiii |
| 2) இங்கிலாந்து | B) விக்றா இம்மானுவேல் ii |
| 3) பிரான்ஸ் | C) மௌனி வில்லியம் |
| 4) நெதர்லாந்து | D) பொதிநந்து இஸாபலா |
| 5) இத்தாலி | E) ஹென்றி vii |

1) DEACD 2) EDACB 3) DEACB 4) CEABD 5) DECAB ( )

19.

| X | Y |
|---|---|
| 1) பிறன்ஸா | A) இங்கிலாந்து |
| 2) றொமானோல் | B) பிரான்ஸ் |
| 3) ஸ்ருவர்ட் | C) இத்தாலி |
| 4) சவோய் | D) போர்த்துக்கல் |
| 5) ஓர்லியன்ஸ் | E) ரஷ்யா |

1) DCEAB 2) CEABD 3) DEACB 4) BEACD 5) EDACB ( )

20.

| X | Y |
|---|---|
| 1) நோர்வே | A) வார்ஸோ |
| 2) பின்லாந்து | B) ஒஸ்லோ |
| 3) போலந்து | C) சோபியா |
| 4) பல்கேரியா | D) புடாபெஸ்ட |
| 5) ஹங்கேரி | E) ஹெல்ஸிங்கி |

1) DCEAB 2) CEABD 3) DEACB 4) BEACD 5) EDACB ( )

21.

| X | Y |
|---|---|
| 1) தோமஸ் கொப்ஸ் | A) பயனுடைவாதம் |
| 2) மொன்றரெஸ்கியூ | B) ஒரு நாட்டிற் சோசலிஸம் |
| 3) ஜெரெமிபெற்தம் | C) இடையறாத புரட்சி |
| 4) லியோன்ற் றொஸ்கி | D) அதிகார வேறாக்கம் |
| 5) ஜேசெப்ஸ்ராலின் | E) சர்வதிகார ஆட்சி |

1) DECAB 2) CEABD 3) DEACB 4) BEACD 5) EDACB ( )

e-தக்சலாவ The National e-learning Portal for The General Education

22. **X** **Y**

| X | Y |
|---|---|
| 1) கப்பலோடி ஹென்றி | A) ஒல்லாந்தர் |
| 2) வஸ்கோத வல்வோ | B) ஆங்கிலேயர் |
| 3) பிறான்ஸிஸ்ட்றேக் | C) பிரான்ஸியர் |
| 4) காட்டியர் | D) ஸ்பானிய |
| 5) ஹட்ஸன் | E) போர்த்துக்கேயர் |

1) EABDC 2) EBDAC 3) ECDAB 4) EDBCA 5) EACDB

( )

23. **X** **Y**

| X | Y |
|---|---|
| 1) பொற்றிசலி | A) இறுதித்தீர்பு |
| 2) லியனாடோ டாவின்சி | B) ஐந்தான் சார்ள்ஸ் |
| 3) மைக்கேல் ஆஞ்சலோ | C) அதென்ஸ் கல்லூரி |
| 4) றபோல் | D) வீனஸ் உற்பத்தி |
| 5) ரிற்ரியன் | E) மொனாலிசா |

1) DCEAB 2) CEABD 3) DEACB 4) BEACD 5) EDACB

( )

24. **X** **Y**

| X | Y |
|---|---|
| 1) வில்லியம் ஹார்வே | A) குருதிச் சுற்றோட்டம் |
| 2) சரசல்பலஸ் | B) நாடி மருந்துமுறை |
| 3) பெரல்ஸ் | C) நுரையீரல் செயற்படி |
| 4) மைக்கல் சர்வேட்ஸ் | D) மருந்துக் கோட்பாடு |
| 5) அம்புறூஸ்பாரி | E) மருத்துவ ஆய்வு |

1) EABCD 2) EBCAD 3) EDBCA 4) EADBC 5) ECADB

( )

25. **X** **Y**

| X | Y |
|---|---|
| 1) தேசிய அரசு | A) ஜேர்மனி |
| 2) நாடுகாண் பயணம் | B) இத்தாலி |
| 3) மறுமலர்ச்சி | C) இங்கிலாந்து |
| 4) சமய சீர்திருத்தம் | D) போர்த்துக்கல் |
| 5) கைத்தொழிற் புரட்சி | E) ஸ்பானியா |

1) EDBAC 2) ECADB 3) EBACD 4) ECABD 5) EBADC

( )

❖ ***26 – 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒனறு அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து.***

**(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் ……………… *1* எனவும்**

**(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் ……………... *2* எனவும்**

**(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் ……………... *3* எனவும்**

**(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் ……………... *4* எனவும்**

**ஒருவிடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் *5* எனவும் அடைப்புள்ளிக் கோட்டில் எழுதுக.**

26. மானிய முறையின் அம்சங்கள்

A) அரசியல் அதிகாரப் பரவலாக்கம் B) அடிமை முறை

C) பலவீனமான பிரபுகள் D) தனிமனித வாதம்

( )

27. மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற வர்த்தக நகரங்கள்

A) வியன்னா B) பாரிஸ் C) லிஸ்பன் D) லிவர்பூல்

( )

28. முப்பது ஆண்டுப் போரின் விளைவுகள்

A) ஜேர்மனியின் அழிவு B) யாப்பு முறை குடியாட்சி

C) பிரான்சின் வல்லரசு நிலை D) சுவீடனின் ஆதிக்கம்

( )

29. போர்த்துக்கேயர் மேற்கொண்ட நாடுகளைப் பயணங்கள் தொடர்பாக மேல்வருவனவற்றுள் எது / எவை சரியானது / சரியானவை?

A) ஆசியாவை அடைவதற்கு ஒரு புதிய வழியைக் கண்டுபிடிப்பதே பிரதானமான நோக்கமாகும்.

B) ஆரம்ப காலத்து நாடுகள் பயணங்கள் கப்பலோட்டி ஹென்றியின் ஆதரவுடன் நடை பெற்றன.

C) பிரெஸ்ட் ஜோன் என்பவரோடு போர்த்துக்கேயரால் தொடர்பு கொள்ள முடிந்தது.

D) வாஸ் கொடகாம 1478 இல் கோவாவிற்கு வந்தார்

( )

30. கைத்தொழிற் புரட்சியின் விளைவுகள்

A) பொருளாதார மந்த நிலை B) உற்பத்திப் பெருக்கம்

C) சூழல் மாசடைதல் D) தொழிலாளர் முதலாளி ஒற்றுமை

( )

The National e-learning Portal for The General Education

❖ ***31 – 35 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடைகள் வீதம் தரப்பட்டுள்ள அவ்விடயங்களுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தாதுள்ளது. அப்பொருந்தாததைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.***

31. மறுமலர்ச்சிக்கால கட்டடக்கலை
   1) உரோமானியாக் கட்டிடக்கலை செல்வாக்கு
   2) உரோமன்ஸ் கலை மரபு
   3) புளோரன்ஸ் நகரத்தை தலைமை இடமாகக் கொள்ளல்
   4) கொதிக்முறை அமைப்பு
   5) இடைக்காலத்திலும் பிற சமயங்களிலிருந்தும் பெறப்படல்.

( )

32. முப்பதாண்டுப் போரின் பிரதான கட்டடங்கள்
   1) பொஹிமிய காலகட்டம் 2) டென்மார்க் காலகட்டம் 3) சுவீடன் காலகட்டம்
   4) பிரான்ஸ் காலகட்டம் 5) ஜேர்மனிய காலகட்டம்

( )

33. அமெரிக்காவில் காணப்பட்ட பழங்குடியினர்
   1) ஹோல்பெல் 2) இரொக்கொயிஸ் 3) பியூப்லோ
   4) அபோஜிஞ்சர் 5) மாயா

( )

34. பிரெஞ்சுப் புரட்சி
   1) ரென்னிஸ் மைதான சத்தியப் பிரமாணம் பிரெஞ்சுப் புரட்சியின் தொடக்கத்தைக் குறித்தது.
   2) 1789 இல் யூலை 14ம் திகதி பஸ்டீல் கோட்டை உடைக்கப்பட்டது.
   3) அரசியலமையு விதிகளுக்கு கட்டுப்பட்ட அரசனாக 17ம் லூயி முடி சூட்டப் பெற்றான்.
   4) தேசிய கலை மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டது
   5) புரட்சியினால் முதலாளித்துவர்கமே கூடிய பலனைப் பெற்றது.

( )

35. ஆதிகால கிறிஸ்தவம்
   1) கிறிஸ்தவம் யேசுநாதரின் வாழ்க்கை, போதனைகள், மரணம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது.
   2) உரோம அதிகாரிகளினால் யேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார்.
   3) கடவுள் ஒருவர் என்பது கிறிஸ்தவக் கோட்பாடு
   4) நீரோ சக்கரவர்த்தி கிறிஸ்தவர்களுக்கு வழிபாட்டுரிமைகளை வழங்கினார்
   5) தியோடோசியஸ் என்னும் பேரரசர் கிறிஸ்தவத்தை உரோம பேரசின் அரச சமயமாக்கினார்.

( )

❖ ***36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1,2,3,4,5 என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவெனத்தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப்புள்ளிக் கோட்டில் எழுதுக.***

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 36. கிரேக்க ஒரு பொதுவான மொழி பண்பாடு ஆகியவற்றைக் கொண்டிருந்த பொழுதிலும் அவர்கள் அரசியல் அடிப்படையில் பிரிந்திருந்தனர். | ஒவ்வொரு நகராட்சியினரையும் பேணிக் கொள்வதில் கிரேக்கர்கள் உறுதி கொண்டிருந்தால் பெருமளவான பகுதிகளைக் கொண்ட அரசியல் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. ( ) |
| 37. மகா அலக்ஸாந்தர் உரோமாபுரியில் ஒரு களியாட்ட அரங்கமாக கொலோஸியத்தைக் கட்டினார் | உரோமர்கள் அளித்து சென்ற அருஞ் செல்வங்களில் அவர்களின சட்ட முறையே முதன்மையானது. ( ) |
| 38. லிவி, ரசிற்றஸ் ஆகியோர் புராதனகால உரோமாபுரியின் மிகப் பிரசித்தமான வரலாறு ஆசிரியர்களாவர். | லங்காஸ்ற்ரர் வம்சத்திற்கும் ரியூட்ர் வம்சத்துக்கும் இடையிலான போர்கள் குருசுப் போர்கள் எனப்படும். ( ) |
| 39. ஒலிவர் குரோம்வெல்லின் தலைமைத்துவத்தின் கீழ் பாராளுமன்ற சட்டத்திற்கமைய மாண்புமிகு புரட்சியின் போது முதலாம் சாள்ஸ் என்பவர் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார். | இங்கிலாந்திலே பாராளுமன்ற ஆட்சி சட்டம் வழியான ஆட்சி என்னும் கோட்பாடுகளை மாண்புமிகு புரட்சி வலுப்படுத்தியதாக கருதப்படுகின்றது. ( ) |
| 40. மத்திய காலத்தில் ஐரோப்பாவிலே கிறிஸ்தவ சமயத்தை ஆதாரமாகக் கொண்டு ஒரு பொதுவான நாகரிகம் உருவானது. | முற்காலத்தில் மானிடவாதிகளில் ஒருவரான பெற்றாக்கைச் சிலர் மானிடவாதத்தின் தந்தையென கொள்வர். ( ) |

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| தரம் :- 13 (2018) | ஐரோப்பிய வரலாறு II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ முதலாம் வினாவுக்கும் வேறு ஏதாவது மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. உமக்கு தரப்பட்ட ஐரோப்பிய தேசப்படத்தில் பின்வரும் இடங்களை குறித்துப் பெயரிட்டு அவற்றுள் ஏதாவது இரண்டிற்கு வரலாற்று குறிப்பெழுதுக.
    1) சிசிலி 2) றைன் 3) லண்டன் 4) லிஸ்பன்
    5) கீல்கால்வாய் 6) ஏஜியன்கடல் 7) கொஸ்தாந்திநோபின் 8) வெனிஸ்
    (சரியாக குறித்துப் பெயரிடுவதற்கு 1 புள்ளி சிறுகுறிப்பு ஒவ்வொன்றுக்கும் 5 புள்ளி)

02. கிரேக்கர் அவர்களுடைய பண்பாடு தொடர்பான மேல்வரும் துறைகளில் இரண்டில் ஈடிய சாதனைகளைச் சுருக்கமாக விளக்குக.
    1) சமயம் 2) கட்டிடகலை 3) இலக்கியம் 4) தத்துவம்

03. i) இத்தாலியில் மறுமலர்ச்சி ஏற்பட்டமைக்கு ஏதுவான காரணங்களை சுருக்கமாக ஆராய்க. (6 புள்ளிகள்)
    ii) மறுமலர்ச்சியின் பிரதானமான அம்சங்களைப் பரிசீலனை செய்க. (8 புள்ளிகள்)

04. “கிறிஸ்தவ சீர்திருத்த இயக்கம் ஐரோப்பாவின் சமய ஒற்றுமையைத் தகர்த்ததோடு திருச்சபையினையும் பலவீனப்படுத்தியது.
    1) கிறிஸ்தவ சீர்திருத்த இயக்கத்தின் தலைவரின் பெயரைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
    2) கிறிஸ்தவ சீர்திருத்த இயக்கம் தொடங்கிய நாட்டின் பெயரைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
    3) அந்த நாட்டிலே கிறிஸ்தவ சீர்திருத்த இயக்கம் தோன்றுவதற்கு ஏதுவான காரணங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)
    4) கிறிஸ்தவ சீர்திருத்த இயக்கத்தின் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு மேலே தரப்பட்ட கூற்றினை பரிசீலனை செய்க. (7 புள்ளிகள்)

05. நவீன காலத்தின் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகளின் பிரதான அம்சங்களை விரிவாக ஆராய்க. (1 புள்ளி)

06. முப்பதாண்டு போரின் பிரதான நான்கு கட்டங்களையும் குறிப்பிட்டு விளக்குக. (14 புள்ளிகள்)

07. கைத்தொழிற்புரட்சி 18 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் பின் ஆரம்பத்திலும் இங்கிலாந்திலே நீண்ட காலம் நிலை பெறக்கூடிய பொருளாதார தொழில்நுட்ப சமூக மாற்றங்களை ஏற்படுத்தியது.

1) கைத்தொழிற் புரட்சி எதனைக் குறிக்கிறது என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. (2 புள்ளிகள்)

2) கைத்தொழிற் புரட்சி ஐரோப்பாவில் ஏனைய நாடுகளை விட முதன் முதலாக இங்கிலாந்தில் ஏற்பட்டமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

3) கைத்தொழில் புரட்சியின் விளைவுகளின் அடிப்படையில் மேற்குறித்த குறிப்பினைப் பரிசீலனை செய்க. (7 புள்ளிகள்)

08. "மத்தியதர வர்க்கம் பிரெஞ்சுப் புரட்சியினைத் தொடங்கியது அதுவே கூடுதலான பலன்களையும் பெற்றது.

1) பிரெஞ்சுப் புரட்சி ஏற்படும் தறுவாயில் கூட்டப்பெற்ற பிரதிநிதித்துவச் சபையின் பெயரை எழுதுக. (1 புள்ளி)

2) பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்ட பொழுது பிரான்சில் ஆட்சிபுரிந்த அரசரதும் அரசியினதும் பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

3) புரட்சிக்கு முற்பட்ட பிரான்ஸில் நிலவிய சமூகக் கட்டமைப்பினைப் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (3 புள்ளிகள்)

4) பிரெஞ்சு புரட்சியின் விளைவுகளைக் குறித்து முன்னே தரப்பட்ட குறிப்பிலான நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (8 புள்ளிகள்)